# භාණ්ඩාගාර මෙහෙයුම් දෙපාර්තමේන්තුව
# திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்
# Department of Treasury Operations

තැ.පෙ.1559, මහ භාණ්ඩාගාරය, මුදල්, ආර්ථික සංවර්ධන,ප්‍රතිපත්ති සම්පාදන, සැලසුම් සහ සංචාරක අමාත්‍යාංශය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව

த.பெ.1559, பொது திறைசேரி, நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை வகுத்தல், திட்டமிடல் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு, கொழும்பு 01, இலங்கை

P.O.Box: 1559, General Treasury, Ministry of Finance, Economic Development, Policy Formulation, Planning and Tourism, Colombo 01, Sri Lanka

| | | | | | |
|---|---|---|---|---|---|
| කාර්යාලය<br>அலுவலகம்<br>Office | +94 11 2484600<br>+94 11 2484700 | ෆැක්ස්<br>பெக்ஸ்<br>Fax | +94 11 2484970<br>+94 11 2320042 | වෙබ් අඩවිය<br>இணையதளம்<br>Website | www.treasury.gov.lk |


| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No. | TOD/CFM/01/05/03 | ඔබේ අංකය<br>உமது இல<br>Your | | දිනය<br>திகதி<br>Date | 2024.11. 04 |

**திறைசேரி செயற்பாடுகள் வழிகாட்டி இலக்கம் 06/2020**

அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும்
மாவட்டச் செயலாளர்கள் யாவருக்கும்,

**<u>2024 ஆம் நிதியாண்டின் இறுதியில் காசுப் புத்தகங்களை மூடுதல் மற்றும் பணி முற்பணக் கணக்குகளை மூடுதல்.</u>**

என்னால் வெளியிடப்பட்ட 2020.10.14 ஆந் தேதிய திறைசேரி செயற்பாடுகள் வழிகாட்டி இல.06 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளின்படி> 2024 ஆம் ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகங்களை மூடுதல் மற்றும் பணி முற்பணக் கணக்குகளை மூடுதல் ஆகியவற்றுக்காக இங்கு கீழே காட்டப்பட்டுள்ள தினங்களைப் பயன்படுத்தி அந்த உரிய திகதிக்கு அல்லது அன்றைய தினத்துக்கு முன்னர் உரிய நடவடிக்கைகளை ஒழுங்கு செய்துகொள்ளுமாறு தயவுடன் அறியத்தருகிறேன்.

**1. <u>2024 டிசம்பர் 31 ஆந் திகதியிலுள்ளவாறு காசுப் புத்தகத்தை மூடுதல்.</u>**

2022 ஆம் ஆண்டின் காசுப் புத்தகத்தை 2024 டிசம்பர் 31 ஆந் திகதியின் இறுதியில் திறைசேரி வழிகாட்டி இல.06 இல் 1 ஆவது பந்தியில் குறிப்பிடப்படுள்ள விதமாக மூடுதல் வேண்டும்.

**2. <u>2024 ஆம் ஆண்டிற்கான பணி முற்பணக் கணக்கை (7002) மூடுவதற்காக வருடத்தின் இறுதியில் காசுப் புத்தகத்தின் மீதியை பொதுத் திறைசேரிக்கு அனுப்புதல். (வழிகாட்ட இல.06 இல் 2 ஆம் பந்தி)</u>**

2024 டிசம்பர் 31 ஆந் திகதியன்று உள்ளவாறு காசுப் புத்தகங்கள் மீதியைக் குறிப்பிட்டு TOD/IMP/06 ஆம் இலக்கத்தைக் கொண்ட மாதிரிப் படிவத்தைப் பூர்த்தி செய்து உப அலுவலகங்கள் அற்ற அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் 2025 சனவரி 01 ஆம் திகதியும் உப அலுவலகங்களைக் கொண்ட அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் அதேபோன்று மாவட்டச் செயலகங்களினால் 2024 சனவரி 03 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் தங்களது உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கைப் பேணி வருகின்ற வங்கிக் கிளைக்கு ஒப்படைத்து உரிய தொகையை திறைசேரிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். வங்கியிடமிருந்து தங்களுக்குக் கிடைக்கின்ற “வரவு” அறிவித்தல் கிடைத்தவுடன் அதன் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றுடன் TOD/IMP/06 இலக்கத்தைக் கொண்ட மாதிரிப் படிவத்தின் பிரதியையும் இந்தத் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2024 ஆம் ஆண்டில் உப அலுவலகத்திற்கு வழங்கப்பட்டுள்ள சகல இடைக்கால பணி முற்றபணங்களையும் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஏனைய முற்பணங்களையும் 2024.12.31 ஆம் திகதியன்று அல்லது அன்றைய தினத்துக்கு முன்னர் செலுத்தி அந்தக் காசு மீதிகளை 2025 சனவரி 03 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் திறைசேரிக்கு

அனுப்பக்கூடிய விதத்தில் தங்களினால் தேவையான முன்னேற்பாடுகளை செய்து கொள்ளுதல் வேண்டும்.

3. **<u>2024 ஆம் ஆண்டுக்கான மீள்நிரப்பல் செய்யக்கூடிய வெளிநாட்டுதவி பணி முற்பணக் கணக்கை (7003) செலுத்துவதற்காக வருட இறுதியில் காசுப் புத்தகத்தின் மீதியை பொதுத் திறைசேரிக்கு அனுப்புதல். (வழி காட்டி இல.06 இல் 3 ஆவது பந்தி)</u>**

மீள் நிரப்பல் செய்யப்படுகின்ற வெளிநாட்டு உதவிக்;காக 7003 குறியீட்டு இலக்கத்தின் கீழ் கருத்திட்டத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட பணி முற்பணங்களை 2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறு காசுப் புத்திகத்தின் மீதியை உறுதிப்படுத்தி மாதிரிப் படிவ இல. TOD/IMP/07 ஐ உரிய விதத்தில் பூர்த்தி செய்து 2025 சனவரி 03 ஆந் திகதியன்று கணக்கைப் பேணி வருகின்ற வங்கிக் கிளைக்கு ஒப்படைத்து உரிய தொகையை திறைசேரிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டிய அதேவேளையில், வங்கியிடமிருந்து தங்களுக்குக் கிடைக்கின்ற "வரவு" அறிவித்தலை சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றுடன் மாதிரிப் படிவ இல. TOD/IMP/07 மற்றும் TOD/IMP/07(i) ஆகியவற்றை சரியாகப் பூர்த்தி செய்து தொடர்புடைய அமைச்சின் செயலாளருக்கு பிரதியொன்றைக் கொண்டதாக தாமதமின்றி இந்த அமைச்சுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. திறைசேரி வழிகாட்டிகள் இல.06 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய நடைமுறைகள் மற்றும் ஆலோசனைகள் தொடர்ந்தும் அவ்வாறே மாற்றமின்றி காணப்படும்.

**ஏ.என்.ஹபுகல**
பணிப்பாளர் நாயகம்